# வாசகர்களின் கலை இலக்கியத் திறனை மேம்படுத்தல் : "கவிமுளரி" மின்னிதழ் வெளியீடு

ம.பிரகாஷ்*

**அறிமுகம்**

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று பிரதேச சபையின் கீழ் இயங்குகின்ற பேத்தாழை பொது நூலகமானது 2011 மார்கழி 10ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து நூலகத்தினது விபுலானந்தர் வாசகர்வட்டத்தின் பெரும் ஒத்துழைப்புடன் பல வாசிப்பு சார்ந்த செயற்றிட்டங்களைத் திறம்பட நடாத்தி வருகின்றது. அவற்றுள் குறிப்பிடத்தக்கதாக "பேத்தாழை விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம்" எனும் அமைப்பினை உருவாக்கி, கோறளைப்பற்று பிரதேச செயலகத்தினூடாக மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்து அதனூடாக இலக்கியம் மற்றும் கலைகள் சார்ந்த பணிகளை செய்து வருகின்றது. குறிப்பாக மாணவர்களுக்கான விவாத அரங்குகள், கவியரங்குகள், நூல் வெளியீடுகள் போன்றவற்றை நடாத்தி வாசகர்களின் கலை இலக்கிய ஆர்வத்தினை மேம்படுத்தி வருவதோடு, ஒவ்வொரு ஆண்டும் கலை, இலக்கியத் துறையில் சிறப்பாக செயற்பட்டுவரும் ஒருவரை தெரிவுசெய்து, பேத்தாழை விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் சிறப்பு விருதான "விபுலம்" விருதினை வழங்கி வருகின்றது. இலக்கியப் படைப்பாளிகளை ஊக்குவிப்பதே இச்செயற்றிட்டத்தின் பிரதான நோக்கமாகும். இத்திட்டத்துடன் இணைந்ததாக முகநூல் வாயிலாக தமது கவிதைபுனையும் திறனை வெளிக்காட்டிவரும் கவிஞர்களுக்கு ஒரு களத்தினை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கோடு பேத்தாழை பொது நூலகத்தின் விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தினால் உருவாக்கப்பட்டதே "கவிமுளரி" எனும் மின்னிதழாகும். பேத்தாழை பொது நூலகத்தின் வாசகர்கள் மாத்திரமல்லாது முகப்புத்தகங்களில் கவிதை புனையும் ஏனைய கவிஞர்களின் ஆக்கங்களையும் சேகரித்து ஒவ்வொரு மாதமும் ஒரு மின்னிதழாக வடிவமைத்து கலை இலக்கிய மன்றத்தின் முகப்புத்தக பக்கத்திலும், அதனது உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் பகிரப்படுகிறது.

**செயற்றிட்ட அமுலாக்கப் படிமுறைகள்**

பேத்தாழை பொது நூலகத்துடனும், அதனது விபுலானந்தர் வாசகர்வட்டத்துடனும் இணைந்ததாக உருவாக்கப்பட்ட விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் நிருவாக உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தவர்களை இணைத்து ஒரு கலந்துரையாடல் ஒழுங்கமைக்கப்பட்டது. அதனடிப்படையில் பெறப்பட்ட தீர்மானத்திற்கமைய, குறித்த திட்டத்திற்கான அழைப்பினை முகநூல் வழியாகவும், மன்றத்தின் இணையத்தளம் மற்றும் வட்ஸப் குழுமம் என்பவற்றினூடாகவும் பகிரப்பட்டதோடு, இக் 'கவிமுளரி' மின்னிதழுக்கான கவிதைகளை இதற்கெனவே பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட editor2023kavimulari@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரி ஊடாக, அல்லது 0770196205 என்ற வாட்ஸப் இலக்கத்தினூடாக அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டது.

தமது ஆக்கங்களை அனுப்பி வைப்பதற்காக குறிப்பிட்ட ஒரு காலஇடைவெளியினை வழங்கியதோடு, கவிஞர்களினால் அனுப்பிவைக்கப்படும் கவிதைகளை பரிசீலித்து அழகிய வர்ணப் படங்களையும் உள்ளடக்கியதான 'கவிமுளரி' மின் இதழினை வடிவமைத்து, 25.10.2023 அன்று முதலாவது

**Corresponding Author:* ம.பிரகாஷ், பேத்தாழை பொது நூலகம், கோறளைப்பற்று பிரதேச சபை, வாழைச்சேனை, மட்டக்களப்பு, இலங்கை. Email: mpragash5@yahoo.com

மின்னிதழ் வெளியிடப்பட்டது. அன்றிலிருந்து மாதத்தின் ஒவ்வொரு 25ஆம் திகதியும் 'கவிமுளரி' மின்னிதழ் தவறாது வெளிவருகின்றது. இச்செயற்றிட்டமானது பலரின் வரவேற்பினைப் பெற்றிருக்கின்றது. இம்மின்னிதழில் உள்நாட்டுக் கவிஞர்களின் கவிதைகள் மாத்திரமல்லாமல் புலம் பெயர் நாட்டின் கவிஞர்களின் கவிதைகளும் இடம்பெற்று வருகின்றமையை இந்நூலகத்தினுடைய விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் வெற்றியாக கருதுகின்றது.

**செயற்றிட்ட அடைவுகள் மற்றும் விதப்புரைகள்**

பேத்தாழை பொது நூலக விபுலானந்தர் வாசகர்வட்டத்தின் மேலதிக கலை இலக்கிய செயற்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட பேத்தாழை விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் செயற்பாடுகள் அனைத்துமே பிரதேச மக்களிடையே மருவி வரும் கலை, இலக்கிய அம்சங்களை பேணிப்பாதுகாத்து அடுத்த சந்ததி யினருக்குக் கையளிப்பதை நோக்காகக் கொண்டது. அந்த வகையில் இந்நூலகத்தின் கலை இலக்கிய மன்றம் ஆரம்பித்து தடையறாது வெளியிட்டு வருகின்ற 'கவிமுளரி' மின்னிதழும், தத்தமது ஆக்கங்களை புத்தக வடிவில் வெளியிட முடியாமல் உள்ள கவிதை படைப்பதில் ஆர்வங்கொண்டவர்களின் ஆக்கங்களை ஒன்று திரட்டி வெளிவருகின்றது. 25.06.2024 வரை ஒன்பது கவிமுளரி மின்னிதழ்கள் மன்றத்தின் முகப்புத்தக பக்கத்தின் ஊடாகவும், https://kavimulari.blogspot.com என்கின்ற இணை யத்தளத்தினூடாகவும் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுள், பிரசித்திபெற்ற புலம்பெயர் கவிஞர்களின் கவிதைகள் மாத்திரமல்லாது, நாட்டின் பல பாகங்களிலுமுள்ள கவிஞர்களின் கவிதை களும் இடம்பெற்று வருகின்றன. அது மாத்திரமின்றி, பல வாசகர்கள் இக்கவிமுளரியின் செயற்பாட்டி னால் ஈர்க்கப்பட்டு புதிய கவிஞர்களாகவும் உருவாகி வருகின்றனர். மாதம் ஒருமுறை வெளிவரும் கவிமுளரி மின்னிதழினை 12 மாதங்களுக்கு ஒருமுறை தொகுத்து ஒரு கவிதைத் தொகுப்பாக அச்சிட்டு வெளியிடும் தீர்மானத்தினையும் இந்நூலகத்தின் கலை இலக்கிய மன்றம் மேற்கொண்டிருக்கிறது.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

பேத்தாழை விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தினூடாக வெளியிடப்பட்டுவரும் இக் 'கவிமுளரி' மின்னிதழின் மூலமாக உலகளாவிய ரீதியில் உள்ள பல கவிஞர்களின் கவிதைகள் மாதம் ஒருமுறை வெளியிடப்படுவதன் காரணமாக கவிதைப் பிரியர்களுக்கு ஒரு புதுமையான வாசிப்பு அனுபவத்தினை இது ஏற்படுத்தியுள்ளது. அது மாத்திரமன்றி, பேத்தாழை நூலகத்தின் வாசகர்களும் கவிதைகளைப் படைப்பதில் ஆர்வம் கொண்டிருப்பதனையும் காணமுடிகிறது. ஒவ்வொரு மாதமும் வெளிவரும் கவிமுளரியானது அம்மாதத்தின் விசேட அம்சங்களை தொனிப்பொருளாகக்கொண்ட கவிதைகளை உள்ளடக்கியதாக வெளிவருகின்றமை ஒரு சிறப்பம்சமாகும்.

பேத்தாழை பொது நூலகமானது தமக்கென பணிக்கப்பட்டுள்ள நூலகக் கடமைகளையும் தாண்டி சமூக நல ஈடுபாட்டுடன் பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டுவருகின்றது. அதற்கும் மேலாக நூலகத்தினால் உருவாக்கப்பட்டுள்ள பேத்தாழை விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் செயற்பாடுகளும் உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் சீராக இடம்பெற்று வருகின்றன. அந்தவகையில் கவிதையில் ஈடுபாடு கொண்டோருக்கு 'கவிமுளரி' மின்னிதழின் மூலமாக வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதனைப் போன்று, வாசகர் மத்தியில் காணப்படும் பற்பல திறன்களை இனங்கண்டு பொது நூலகத்தினாலான ஒத்துழைப்பினை வழங்குவதன் மூலமாக சிறந்த ஆற்றல்கொண்ட பிரஜைகளை உருவாக்கலாம் எனும் நம்பிக்கையை இந்நூலகம் கொண்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** வாசகர் வட்டம், கலை இலக்கிய மன்றம், மின்னிதழ், கவிதைத் தொகுப்பு